**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.51/2024 - PW-2**

| | |
|---|---|
| Name | திருமதி. சரளா |
| Husband/Father Name | கோபி |
| Village /Area | சோகனூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கூலி |
| Age | 38 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.10.2025.
**(எதிரிகள் ஆஜர். ).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்தவர் என்னுடைய மகன் ஆவார். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் இருந்தார்கள். என் கணவர் 2014 ல் இறந்து விட்டார். என் மகன் தீனா 10-ம் வகுப்பு படிந்திருந்தார். என் மகன் எல்லா பிள்ளைகளோடும் வேலைக்கு செல்வான். கடந்த 2015-ம் ஆண்டு என் மகன் வேலைக்கு சென்று வருவதாக கூறி சென்றவர் திரும்ப வீட்டிற்கு வரவில்லை. எனது மகனை தொடர்பு கொண்ட போது அவரது போன் சுவிட்ச் ஆப் ஆகியிருந்தது. பிறகு என் மகனை பற்றி அரக்கோணம் காவல் நிலையத்தில் செய்தித்தாளில் வந்த செய்தியை பார்த்து விசாரித்த போது அது என் மகன் தீனா என்று தெரிந்து கொண்டு வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று நான் பார்த்த போது என் மகனின் கழுத்து, கை, கால் ஆகிய பகுதிகளில் வெட்டு காயங்கள் இருந்தது. என் மகன் அணிந்திருந்த

ஜப மாலை மற்றும் அவர் கையில் டாட்டூ வரைந்திருந்ததை வைத்து அவர் என் மகன் தான் என அடையாளம் தெரிந்துக்கொண்டோம். அரக்கோணம் நகர காவல் ஆய்வாளர் என் மகனின் உடலின் மீது பிரேத விசாரணை செய்து என் மகனின் உடலை எங்கள் குல வழக்கம் படி அடிக்கம் செய்தோம். இறக்கும் போது என் மகனுக்கு 20 வயதிருக்கும். செய்தி தாளில் போடப்பட்டிருந்த தகவலின் அடிப்படையில் தான் நான் காவல் நிலையத்திற்கு சென்று எனது மகனினுடைய இறப்பை பற்றி தெரிந்து கொண்டேன். எனது மகன் ஜப மாலை அணிந்திருப்பார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.07 16:56:26 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.